www.Padasalai.Net

**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – அரசு உதவிபெறும் பள்ளிகள் - 2023-2024ஆம் கல்வி ஆண்டிற்கான பணியாளர் நிர்ணய அறிக்கையின்படி அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் உபரிப் பணியிடங்களில் பணிபுரிந்துவரும் ஆசிரியர்களை பணிநிரவல் செய்வது தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்த வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித்[பக6(1)]துறை**

**அரசாணை (நிலை) எண்.** 146 | **நாள்:** 28.06.2024.
திருவள்ளுவர்ஆண்டு 2055
**குரோதி வருடம் ஆனி** 14

**படிக்கப்பட்டவை :-**

1. தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குபடுத்தும்) சட்டம் 1973 மற்றும் விதிகள் 1974
2. தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குபடுத்தும்) சட்டம் 2018 மற்றும் விதிகள் 2023.
3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 48834/டி1/ இ4/2023, நாள்.25.06.2024.

-----

**ஆணை:-**

மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதத்தில், 2023-2024ஆம் கல்வி ஆண்டிற்கான பணியாளர் நிர்ணய அறிக்கையின்படி அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் உபரிப் பணியிடங்களில் பணிபுரிந்துவரும் ஆசிரியர்கள் தொடர்ந்து அதே பணியிடங்களில் பணிபுரிய அனுமதிக்கப்படும் சூழலில் அரசிற்கு ஏற்படும் நிதியிழப்புகளை தவிர்த்திடும் பொருட்டும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் பணிநிரவல் சார்ந்து வழங்கியுள்ள பல்வேறு தீர்ப்பாணைகளின் அடிப்படையிலும், முதற்கட்டமாக, சிறுபான்மையற்ற அரசு நிதி உதவிபெறும் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்து வந்த உபரி ஆசிரியர்கள் தாங்கள் பணிபுரிந்து வரும் மாவட்டத்திற்குள் உள்ள இதர அரசு நிதியுதவி பெறும் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், நிரப்பத்தகுந்த காலிப்பணிடங்களில் பணிநிரவல் செய்யப்பட்டுள்ளனர் என்றும், மேலும், கூட்டு

 www.Padasalai.Net

மேலாண்மை நிர்வாகத்தின்கீழ் செயல்பட்டுவரும் பள்ளிகளில் உபரி ஆசிரியர்களை அவர்களது நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டுவரும் பிற பள்ளிகளில் உள்ள நிரப்பத்தகுந்த காலிப்பணியிடங்களில் பணிநிரவல் செய்து ஆணை வழங்கிட பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.48834/டி1/இ4/2023, நாள் 09.02.2024 மற்றும் 06.05.2024-இல் அறிவுரைகள் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குபடுத்தும்) சட்டம் 2018 மற்றும் தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குபடுத்துதல்) விதிகள், 2023ல் விதி 32ல் பணியாளர் நிர்ணயம் மற்றும் உபரி ஆசிரியர்களை பணிநிரவல் செய்வது குறித்து விரிவான விதிகள் வகுத்துரைக்கப்பட்டுள்ளது என்றும், எனினும், தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மேற்கண்டுள்ள சட்டம் மற்றும் விதிகளை எதிர்த்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள W.P. No. 10711/2023 உள்ளிட்ட இதர வழக்குகளில் 21.04.2023ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம்

> ***"...... the respondents are directed to maintain status quo as on the date of the judgement of the Division Bench of this court dated 17.12.1975..."***

என ஆணையிட்டதை தொடர்ந்து அந்நாளில் நடைமுறையிலிருந்த தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் சட்டம் 1973 மற்றும் தொடர்புடைய விதிகள் 1974ன்படியும் சிறுபான்மைப் பள்ளிகளைப் பொருத்தவரையில் மேற்கண்டுள்ள விதிகள் தொடர்பான வழக்கு எண். 4478 of 1974 மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 17.12.1975ல் வழங்கிய தீர்ப்பாணையின் அடிப்படையிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும், 2023-24ஆம் ஆண்டு பணியாளர் நிர்ணயத்தின்படியான பணிநிரவல் நடவடிக்கையின் முதற்கட்டமாக, சிறுபான்மையற்ற பள்ளிகளின் உபரி ஆசிரியர்கள் மாவட்டத்திற்குள் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் சட்டம் 1973ன் பிரிவு 26-ன்படி பணிநிரவல் செய்யப்பட்டுள்ளனர் என்றும், இதன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் தேவைப்படுவதாகவும், எனவே, தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குபடுத்தும்) சட்டம் 2018 மற்றும் தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குபடுத்துதல்) விதிகள் 2023 தொடர்பான வழக்குகளில் இறுதி தீர்ப்பாணை பெறப்படும் வரையில், அரசு நிதிஉதவி பெறும் உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிநிரவல் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து வழிகாட்டு நெறிமுறைகளை வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

www.Padasalai.Net



3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, தமிழ்நாடு தனியார் பள்ளிகள் ஒழுங்காற்றும் சட்டம் – 2018 மற்றும் தொடர்புடைய விதிகள் 2023 தொடர்பான வழக்குகள் இறுதி நிலையை அடைந்து இச்சட்ட விதிகள் முழுமையாக அமல்படுத்தப்படும் வரையில், அரசு நிதி உதவி பெறும் உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் உபரிப் பணியிடங்களில் பணிபுரிந்துவரும் ஆசிரியர்களை பணிநிரவல் செய்வது தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிடலாம் எனக் கருதி அவ்வாறே அரசு ஆணையிடுகிறது:-

## I. <u>அரசு நிதி உதவிபெறும் சிறுபான்மையற்ற பள்ளிகளில் பணிநிரவல் நடவடிக்கைகள்</u>

1. 1.8 நிலவரப்படி பணியாளர் நிர்ணயம் செய்யப்பட்டு, பள்ளி வாரியாக, பதவி வாரியாக உபரி ஆசிரியர்களின் விவரங்கள் EMISல் முதன்மைக் கல்வி அலுவலரால் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
2. பணிநிரவலைப் பொறுத்தவரையில், பள்ளி வாரியாக பதவி வாரியாக பணியில் இளைய உபரி ஆசிரியர்கள் கண்டறியப்பட்டு, நடைமுறை விதிகளைப் பின்பற்றி மாவட்ட அளவில் பதவி வாரியாக மூதுரிமைப் பட்டியல் (Seniority list) தயாரிக்கப்பட வேண்டும்.
3. இம்முன்னுரிமைப் பட்டியலின்படி, உபரி ஆசிரியர்களை கலந்தாய்வு மூலம் மாவட்டத்திற்குள் பிற அரசு நிதி உதவிபெறும் சிறுபான்மையற்ற பள்ளிகளில் நிரப்பத் தகுந்த காலிப் பணியிடங்களுக்கு பணிநிரவல் செய்ய வேண்டும்.
4. மாவட்டத்திற்குள் மேற்கண்டுள்ளவாறு பணி நிரவல் நடவடிக்கை நிறைவடைந்த பின்னர் எஞ்சியுள்ள உபரி ஆசிரியர்களை மாவட்டத்திற்குள் பிற அரசுப் பள்ளிகளில் காலியாகவுள்ள பணியிடங்களுக்கு மாற்றுப் பணியில் நியமிக்க வேண்டும்.
5. இதன் பின்னரும் உபரி ஆசிரியர்கள் எஞ்சியிருப்பின், அருகாமை மாவட்டங்களில் உள்ள பிற அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கு நிரப்பத் தகுந்த காலிப்பணியிடங்களில் முதலில் மாற்றுப் பணியில் பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பின்னர், பிற மாவட்டத்திலுள்ள அரசு பள்ளிகளுக்கு மாற்றுப் பணியில் பணியமர்த்தலாம்.
6. மேற்கண்டுள்ளவாறு மாற்றுப் பணியில் நியமிக்கப்படும் ஆசிரியர்களின் தொகுப்பு பட்டியல் மாவட்ட அளவில் EMISல் / தொடர்புடைய முதன்மைக் கல்வி அலுவலகத்தில் பராமரிக்கப்பட வேண்டும்.

www.Padasalai.Net

7. பணிநிரவல் செய்யப்பட்ட உபரி ஆசிரியர் ஏற்கனவே பணிபுரிந்து வந்த பள்ளியில் அவரது பாடத்திற்குரிய ஆசிரியர் பணியிடம் காலியேற்பட்டு, அப்பணியிடம் நிரப்பத் தகுதியுடையதாக இருப்பின் / அடுத்தடுத்த கல்வியாண்டுகளில் 1991-92ஆம் ஆண்டிற்கு முன்னர் அனுமதிக்கப்பட்ட அரசு நிதி உதவி பெறும் பிரிவுகளில் மாணவர் எண்ணிக்கை அதிகரித்து, பணியாளர் நிர்ணய அறிக்கையின்படி அப்பள்ளிக்கு மீளவும் அப்பணியிடம் திரும்ப அனுமதிக்கப்படின், அரசுப் பள்ளிக்கு மாற்றுப் பணியில் நியமிக்கப்பட்ட ஆசிரியரை மீளவும் அவர் பணியாற்றிய பள்ளிக்கு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் EMIS மூலம் பணி மாறுதல் வழங்க வேண்டும்.

8. மேலும், அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் நிரப்பத் தகுந்த காலிப்பணியிடம் ஏற்படும் போது அப்பணியிடத்தினை நிரப்ப முன் அனுமதி கோரி பள்ளி நிர்வாகம் கருத்துரு சமர்பிக்கும்போது, மேற்கண்டுள்ளவாறு மாற்றுப் பணியில் நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களை அப்பணியிடங்களுக்கு பணி நிரவல் செய்து நிரப்பிட தொடர்புடைய மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

9. மேலும், சிறுபான்மையற்ற தனித்த மேலாண்மைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், நிரப்பத் தகுந்த காலிப் பணியிடங்களில் மேற்கண்டுள்ளவாறு பணி நிரவல் செய்திட உபரி ஆசிரியர் யாரும் இல்லை மற்றும் மாற்றுப்பணியில் எவரும் பணிபுரியவில்லை என்ற நேர்வில், தொடர்புடைய பள்ளியில் பதவி உயர்வு வழங்குவதற்கு தகுதியானவர்கள் யாரும் பணிபுரியவில்லை என்ற சூழலில் மட்டும் நேரடி நியமனத்திற்கான உரிய முன் அனுமதியினை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் வழங்கலாம்.

10. அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் உபரி ஆசிரியர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, கலந்தாய்வில் சார்ந்த ஆசிரியர்களை அவர்கள் தெரிவு செய்யும் பள்ளிகளுக்கு பணிநிரவலில் ஆணை முதன்மைக் கல்வி அலுவலரால் வழங்கப்படும் நிலையில், தொடர்புடைய பள்ளி நிர்வாகங்கள் இப்பணிநிரவல் நடவடிக்கைக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கி உரிய ஆசிரியரை பணிவிடுவிப்பு மற்றும் பணியேற்பு செய்திட அனுமதித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறின்றி, தொடர்புடைய பள்ளி நிர்வாகங்கள் பணிநிரவல் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு அளிக்க மறுக்கும் நேர்வில், அப்பள்ளிக்கு அனுமதிக்கப்பட்ட தொடர்புடைய அப்பணியிடத்தை திரும்பப் பெறுதல், பள்ளிக் குழுவை தற்காலிகமாக செயலற்றதாக்கி நேரடிமானியத்தின் கீழ் கொண்டு வருதல், பள்ளிக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தை தற்காலிகமாக திரும்பப் பெறுதல் உள்ளிட்ட சட்டப்பூர்வமான நடவடிக்கைகள்

www.Padasalai.Net



முதன்மைக் கல்வி அலுவலரால் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் பள்ளி நிர்வாகத்தின் மீது மேற்கண்டுள்ளவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் நேர்வில், பள்ளி நிர்வாக தரப்பின் கருத்தினை அறியும் பொருட்டு ஒரு வாய்ப்பு வழங்கி, பள்ளி நிர்வாகம் சமர்ப்பிக்கும் விளக்கத்தினை பரிசீலித்து அதனடிப்படையிலேயே இறுதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

II. **சிறுபான்மை அரசு உதவிபெறும் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிநிரவல் நடவடிக்கைகள்**

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை மனுக்கள் 4478 of 1974 உள்ளிட்ட வழக்குகளில், 17.12.1975ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையில், தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் சட்டம் 1973 மற்றும் தொடர்புடைய விதிகளில், மேற்கண்டுள்ள சட்டத்தின் பிரிவுகள் 8(1) (a) II (1) (b) 12(1), 14 to 18, 21(2) முதல் 26 வரை, 31 முதல் 33 வரை, 39 (4), 41 முதல் 45 மற்றும் விதிகள் 7, 9(2) (e) மற்றும் (k) தவிர்த்து, விதி 10 முதல் 14, வி தி 16 முதல் 18 மற்றும் விதி 22 முதல் 24 ஆகியன சிறுபான்மைப் பள்ளிகளுக்கு பொருந்தாது என தீர்ப்பாணை வழங்கியுள்ளதன் அடிப்படையிலும், தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தனியார் பள்ளிகள் ஒழுங்காற்றும் சட்டம் 2018 மற்றும் தொடர்புடைய விதிகள் 2023-ஐ எதிர்த்து தொடரப்பட்ட W.P. 10711/2023 உள்ளிட்ட வழக்குளில் 21.04.2023ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையில், 17.12.1975ல் இருந்த நிலையே தொடர வேண்டும் என தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், இவ்வழக்கின் இறுதி தீர்ப்பாணை பெறப்படும் வரையில், பின்வரும் நடைமுறையினைப் பின்பற்றலாம்.

1. 1.8 மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் பணியாளர் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். உபரி ஆசிரியர் விவரங்கள் EMIS-ல் தொடர்புடைய மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களால் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
2. சிறுபான்மை கூட்டுமேலாண்மைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், அம்மேலாண்மையின் கீழ் இயங்கிவரும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு தொடர்புடைய முதன்மைக் கல்வி அலுவலர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட பணியாளர் நிர்ணய அறிக்கையின்படியான உபரி ஆசிரியர்களை தங்களது நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ள பிற பள்ளிகளில் அப்பள்ளிகளுக்குரிய பணியாளர் நிர்ணய அறிக்கையின்படி மானியம் பெற அனுமதிக்கப்பட்ட நிரப்பத்தகுந்த காலிப் பணியிடங்களில் பள்ளி நிர்வாகத்தின் மூலம் பணி நிரவல் செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட வேண்டும். கூட்டு

www.Padasalai.Net

மேலாண்மையால் மேற்கொள்ளப்படும் பணி நிரவல் ஆணைகளை பரிசீலித்து உபரி ஆசிரியர்கள் அரசு மானியம் பெற்று வரும் நிரப்பத்தகுந்த காலிப்பணியிடங்களில் முறையாக பணி நிரவல் செய்யப்பட்டுள்ளதை உறுதிபடுத்தி தொடர்புடைய முதன்மைக் கல்வி அலுவலர்களால் விதிகளின்படி பணிவிடுவிப்பு / பணியேற்பிற்கு ஒப்புதல் வழங்கப்பட வேண்டும். இவ்விவரங்கள் EMIS-ல் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

3. தனித்த சிறுபான்மை அரசு நிதி உதவி பெறும் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் உபரி ஆசிரியர்களை அதே வகையிலான (மதவாரியான/மொழிவாரியான) பிற சிறுபான்மைப் பள்ளிகளில் அக்கல்வியாண்டிற்குரிய பணியின் நிர்ணய அறிக்கையின்படி அனுமதிக்கப்பட்ட நிரப்பத்தகுந்த காலிப் பணியிடங்களில் பள்ளி நிர்வாகத்தின் இசைவின் அடிப்படையில் பணி நிரவல் நடவடிக்கை செய்திட தொடர்புடைய மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.
4. சிறுபான்மை கூட்டு மேலாண்மையின் கீழ் நிரப்பத்தகுந்த காலிப்பணியிடங்கள் இல்லாத நேர்விலும், தனித்த சிறுபான்மை மேலாண்மைப் பள்ளிகள் பள்ளி நிர்வாக இசைவின் அடிப்படையில் பணி நிரவல் செய்யப்பட்ட பின்னரும் எஞ்சியுள்ள உபரி ஆசிரியர்களை மாவட்டத்திற்குள் பிற அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட நிரப்பத் தகுந்த காலிப்பணியிடங்களில் மாற்றுப் பணியில் நியமிக்க வேண்டும். அதன் தொடர்ச்சியாக தேவைப்படும் நேர்வுகளில் மாவட்டத்திற்குள் அரசுப் பள்ளிகளில் மாற்றுப் பணியில் நியமித்திட வேண்டும்..
5. மேற்கண்டுள்ளவாறு மாவட்டத்திற்குள் நிதி உதவி பெறும் பள்ளிகளில் நிரப்பத்தகுந்த காலிப்பணியிடங்களில் பணிநிரவல் மற்றும் அரசு / பிற நிதி உதவி பெறும் பள்ளிகளில் மாற்றுப்பணியில் நியமித்த பின்னரும் உபரி ஆசிரியர்கள் எஞ்சியிருப்பின் அவர்களை அருகாமை மாவட்டங்களில் உள்ள அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட நிரப்பத்தகுந்த காலிப்பணியிடங்களுக்கு மாற்றுப் பணி வழங்கப்பட வேண்டும். இதன் தொடர்ச்சியாக தேவையெனில் பிற மாவட்ட அரசுப் பள்ளிகளுக்கு மாற்றுப் பணியில் பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
6. சிறுபான்மைப் பள்ளிகளில் நிரப்பத்தகுந்த காலிப்பணியிடம் ஏற்படும்போது, அக்குறிப்பிட்ட பதவிக்கு அப்பள்ளி நிர்வாகத்தால் நியமனம் செய்யப்பட்டு உபரி ஆசிரியரானதால் பிற பள்ளிகளில் மாற்றுப்

www.Padasalai.Net



பணியில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்கள் இருப்பின் அவர்களைக் கொண்டே அப்பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு மாற்றுப்பணியில் பணிபுரிந்துவரும் ஆசிரியர்கள்/உபரி ஆசிரியர்கள் எவரும் இல்லாத நிலையில் பள்ளி நிர்வாகம் அப்பணியிடங்களை (i) பதவி உயர்வு (ii) நேரடி நியமனம் மூலம் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஜெ.குமரகுருபரன்
அரசு செயலாளர்.

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35
சம்மந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்
**நகல்:**
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதி(கல்வி-II)த்துறை, சென்னை-9
பள்ளிக்கல்வித் துறை செயலாளர் அவர்களின்
முதன்மை தனிச் செயலாளர், சென்னை-9.
பள்ளிக்கல்வி (வ.செ.)த்துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

S. [signature] 28.6.2024
பிரிவு அலுவலர்